# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 42 / 2021** நாள்: 08.10.2021

### 9 மாவட்டங்களில் 6.10.2021 அன்று நடைபெற்ற முதல் கட்ட வாக்குப்பதிவில் பதிவான வாக்குகளின் இறுதி நிலவரம்

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் உள்ள 39 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 6.10.2021-ல் முதல் கட்ட வாக்குப்பதிவு அமைதியான முறையில் நடைபெற்றது. இந்த வாக்குப்பதிவில் மேற்படி மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு வாக்குகள் பதிவாகியுள்ளன.

| | |
|---|---|
| காஞ்சிபுரம் | .. 84.30 % |
| செங்கல்பட்டு | .. 66.71 % |
| வேலூர் | .. 77.63 % |
| இராணிப்பேட்டை | .. 80.89 % |
| திருப்பத்தூர் | .. 78.88 % |
| விழுப்புரம் | .. 83.66 % |
| கள்ளக்குறிச்சி | .. 82.25 % |
| திருநெல்வேலி | .. 70.81 % |
| தென்காசி | .. 73.96 % |
| மொத்தம் | .. 77.43 % |

இந்த வாக்குப்பதிவின்போது தென்காசி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிவசைலம் கிராம ஊராட்சியில் வார்டு எண் 2 மற்றும் 3-க்கென பொதுவாக அமைக்கப்பட்ட இருவார்டு வாக்குச்சாவடி எண்.130 (அனைத்து வாக்காளர்களுக்கான வாக்குச்சாவடி)-ல் 2வது வார்டுக்கான உறுப்பினர் பதவியிடம் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த வார்டைச் சார்ந்த 45 வாக்காளர்கள் மூன்றாவது வார்டு உறுப்பினர் பதவியிடத்திற்கு நடைபெற்ற தேர்தலுக்காக வாக்களித்திருப்பதாக தென்காசி மாவட்டத் தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்து வார்டு-3 -ல் மறுதேர்தல் நடத்திட அனுமதி கோரியதன் அடிப்படையில் சிவசைலம் கிராம ஊராட்சியின் 3வது வார்டு உறுப்பினர் பதவியிடத்திற்கு மட்டும் 9.10.2021 அன்று மறுவாக்குப்பதிவு நடத்திட ஆணையத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

8/10/2021

மக்கள் தொடர்பு அலுவலர்